Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 21 வெள்ளிக்கிழமை (04.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 158

# பாதுகாப்பு செலவினத்தைக் குறைத்து மனித உரிமைகளைப் பேணும் வரை பிரிட்டனின் நிதி உதவி முடக்கம்!

கொழும்பு, மே 4

இலங்கை அரசாங்கம் தனது பாதுகாப்புச் செலவினத்தைக் குறைக்கும் வரையும், மனித உரிமைகளைப் பேணும் வரையும் -

அதற்கு வழங்கும் நிதி உதவியை முடக்குவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

மேற்படி இரண்டு நிபந்தனைகளையும் பூர்த்தி செய்த பின்னரே நிதி உதவி வழங்குவது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்று கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முன்கண்ட இரண்டு விடயங்களிலும் இலங்கை அரசுக்கு பிரிட்டன் நிபந்தனை விதித்து அவை எந்த விதத்திலும் நிறைவு செய்ய வேண்டும் என்று பிரித்துக் கூறியுள்ளது.

இந்த வருடத்திற்கு வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்ட நிதி உதவியில் அரைப் பங்கு ஏற்கனவே தொடங்கப்பட்ட திட்டங்களுக்காக வழங்கப்பட்டுவிட்டது.

மிகுதி அரைப் பங்கும், அளவுக்கு அதிகமான பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்பட வேண்டும், மனித உரிமைகளைப் பேணுவதில் உருப்படியான பலன் தரும் வகையில் செயற்பட வேண்டும், மோதல்களைத் தூண்டி விடுவதை நிறுத்த வேண்டும் என்பது குறித்த எதிர்பார்ப்புகள் குறித்து இலங்கை அரசிடம் எடுத்துக்கூறியுள்ளோம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

மிகுதிப் பணம் எமது எதிர்பார்ப்புகள் செயலளவில் நிறைவேற்றப்பட்ட பின்னரே வழங்கப்படும் என்றும் பிரிட்டிஷ் தூதரக அதிகாரி மேலும் தெரிவித்தார்.

பிரிட்டன் இலங்கைக்கு வழங்காது முடக்கியிருக்கும் தொகை சுமார் 300 மில்லியன்கள் ரூபாவாகும்.

### நாடாளுமன்றில் அறிவிப்பு

இதேவேளை -

இலங்கைக்கான நிதி உதவி முடக்கப்பட்டிருக்கும் தகவலை பிரிட்டனின் சர்வதேச அபிவிருத்திக்கான துணை அமைச்சர் ஹேரத் தோமஸ் நேற்று வியாழக்கிழமை அந்நாட்டு நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் நேற்று 3 சடலங்களில் இரண்டு எரியுண்ட நிலையில் மீட்பு

வவுனியா, மே 4

வவுனியாவில் படுகொலை செய்யப்பட்ட மூவரின் சடலங்கள் நேற்று கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றில் இரண்டு சடலங்கள் எரியுண்ட நிலையில் காணப்பட்டன.

பூவரசங்குளம் - செட்டிக்குளம் வீதியில் மணியர்குளம் சந்திப் பகுதியில் இரண்டு ஆண்களின் சடலங்கள் காணப்பட்டன. எரிந்து கருகிய நிலையில் கிடந்த அவற்றைப் பொலிஸார் மீட்டனர். இதே வீதியில் கல்லாத்துப் பாலத்துக்கு அருகில் மற்றொரு இளைஞனின் சடலம் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டது.

இவர்கள் மூவரும் வேறு இடங்களில் வைத்துக் கொல்லப்பட்ட பின் சடலங்கள் அங்கு கொண்டுவந்து வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இவர்கள் யாரால் கொல்லப்பட்டனர் என்பதும், யார் என்பதும் உடனடியாகத் தெரியவரவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினமும் வவுனியாவில் விடுதி உரிமையாளர் ஒருவரும், விடுதியில் தங்கியிருந்த மற்றொருவரும் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சந்திரிகாவுக்கான சிறப்பு சலுகைகள் ரத்துச் செய்து உயர் நீதிமன்றம் தீர்ப்பு

### அரசமைப்பை மீறினால் சிறப்புரிமையை ஜனாதிபதி இழப்பார் என்றும் அறிவிப்பு

கொழும்பு, மே 4

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு அவரது ஓய்வு காலத்தை ட்டி அரசினால் வழங்கப்பட்ட பல்வேறு சிறப்புச் சலுகைகளை ரத்துச்செய்து உயர் நீதிமன்றம் நேற்று ஏகமனதாகத் தீர்ப்பளித்திருக்கின்றது.

ஜனாதிபதியின் செயற்பாடுகளில் நீதிமன்றம் தலையிடவோ, அதனைக் கேள்விக்கு உட்படுத்தவோ கூடாது என்று அரசமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு விசேட விலக்களிப்பு வழங்கப்பட்டிருந்தாலும், அந்தச் சிறப்புரிமையை வழங்கும் அரசமைப்பை ஜனாதிபதி மீறும்போது அந்த உரிமையை அவர் இழந்தவராகின்றார். அச்சமயத்தில் நீதிமன்றம் அவரின் செயற்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கலாம் என்றும் உயர் நீதிமன்றம் அறிவித்திருக்கின்றது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, நிமால் காமினி அமரதுங்க ஆகியோரைக்கொண்ட உயர்நீதிமன்ற ஆயமே இந்த சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பை நேற்று வழங்கியது.

கொழும்பு மாதிவெலவில் எட்டுக் கோடி ரூபா செலவில் அரசினால் புனரமைக்கப்பட்ட ஒன்றரை ஏக்கர் காணியை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு வழங்கியமை சட்டவிரோதமானது என்றும் -

சுதந்திர சதுக்கத்திலுள்ள அரச இல்லம் ஒன்றை 4 கோடி 30லட்சம் ரூபா செலவில் புதுப்பித்து அவருக்கு வழங்க நடவடிக்கை எடுத்தமை தவறானது என்றும் -

அளவுக்கு அதிகமான எண்ணிக்கை ஆளணியை அவருக்கு வழங்குவது சட்ட முறையற்றது என்றும் -

நீதியரசர்கள் தீர்ப்பில் தெரிவித்திருக்கின்றார்கள்.

★ மாதிவெல காணியை அரசு மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

★ சுதந்திரசதுக்கத்தில் பெரும்தொகைப் பணம் செலவழித்து சீர்செய்யப்பட்ட அரச இல்லத்தை அரசு திரும்பவும் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு மாற்றாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு, ஓய்வுபெற்ற ஜனாதிபதிக்கு சட்டப்படி உரிய இல்லம் ஒன்றை வழங்க வேண்டும். அத்தகைய இல்லம் அடையாளம் காணப்பட்டு அவருக்கு வழங்கப்படும் வரை, தற்போதைய இல்லத்தை அவர் பயன்படுத்துவதாயின், அவருக்கான மாதாந்த ஓய்

(06ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முன்நகர்வு முயற்சி முறியடிக்கப்பட்டதாக அறிவிப்பு

கொழும்பு, மே 4

வவுனியா பாலமோட்டை பகுதியில் நேற்று இராணுவத்தினர் முன்நகர்வு முயற்சியொன்றை மேற்கொண்டபோது தமிழீழ விடுதலைப் புலிகள் அதனை முறியடித்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

பாலமோட்டைப் பகுதியூடாக நேற்றுமுற்பகல் 10.30 மணியளவில் பல்குழல் ஷெல் வீச்சு மற்றும் எறிகணை சூட்டாதரவுடன் பெருமெடுப்பில் இராணுவத்தினர் முன்னேற முயற்சித்தனர் என்றும் - இம்முயற்சிக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் எதிர்த் தாக்குதலை நடத்தி படையினரின் முயற்சியை முறியடித்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் கொல்லப்பட்ட இரு படையினரின் சடலங்களையும் இராணுவத் தளபாடங்களையும் புலிகள் மீட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படடது.

## கொழும்பு நகரில் நேற்று அடைமழை; வெள்ளம், மண்சரிவால் ஐவர் மரணம்

கொழும்பு, மே 4

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் நேற்றுக்காலை முதல் விடாது பெய்த இடியுடன் கூடிய அடைமழை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரியளவில் பாதிக்கப்படடது. கொழும்பு நகரம் முழுவதும் வெள்ளக்காடாகக் காட்சி தந்தது. பெருகிய வெள்ளம் வீதிகளை நிறைத்து நின்றதில் வாகனப் போக்குவரத்துகள் தடைப்பட்டன. நேற்றுமாலை வரையான 12 மணித்தியாலங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக ஐவர் உயிரிழந்திருக்கின்றனர்.

வெசாக் விடுமுறை தினங்களுக்குப் பிறகு நேற்றுக்காலை அலுவலகங்களுக்கும், பாடசாலைகளுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் திரும்பிக் கொண்டிருந்த பொதுமக்கள் அடைமழையில் சிக்குண்டனர். பாடசாலை மாணவர்கள் மழையிலும் வெள்ளத்திலும் தோய்ந்தனர். கொழும்பு நகரப் பகுதி உட்பட பல பிரதேசங்களிலும் பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தரவில்லை. காலையில் மிகக்குறைவான எண்ணிக்கையில் வந்திருந்த மாணவர்களும் பின்னர்வீடுகளுக்குத் திரும்பினர். பாடசாலைகள் மூடப்பட்டன.

### 3 அடி வெள்ளம்

காலையில் வீடுகளிலிருந்து தத்தமது தொழில் நிலையங்களுக்குப் புறப்பட்டோர்

(06ஆம் பக்கம் பார்க்க)

## பெரும் இடி மின்னலுடன் நேற்றிரவு குடாநாட்டில் பரவலாக மழை

யாழ்ப்பாணம், மே 4

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக நேற்று இரவு 7.50 மணிமுதல் பெரும் இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது.

சுமார் அரை மணிநேரம் சில நிமிட வேளை இடைவெளியில் பேரிடியுடன் மின்னலும் முழக்கமும் தொடர்ந்தன. அதன் பின்னர் சுமாரான மழையும் பெய்தது. மழையால் தாழ்ந்த பிரதேசங்களில் வெள்ள நிலை ஏற்பட்டதாக அறியப்பட்டது.

மழை ஓய்ந்த பின்னரும் இடி முழக்கமும் மின்னலும் நீடித்தன. அவ்வேளைகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் எங்கும் இருள் கவ்வியது.

இதேவேளை - இன்று வெள்ளிக்கிழமையும் இடி மின்னலுடன் கூடிய மழை தொடரும் என்றும்-

வங்களா விரிகுடாவில் உருவாகியுள்ள தாழமுக்கம் காரணமாக வடக்கு - கிழக்கில் கனத்த மழை பெய்யலாம் என்றும் - வளிமண்டல நிலையம் நேற்றிரவு அறிவித்தது.

## கட்டுநாயக்க விமான நிலையத்தை 10ஆம் திகதி முதல் இரவில் மூட முடிவு

கொழும்பு, மே 4

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் 10ஆம் திகதிமுதல் இரவு நேரத்தில் மூடப்படும் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் வான் தாக்குதலையடுத்து இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்தனர். இரவு 22.30 மணிமுதல் அதிகாலை 4.30 மணிவரை விமான நிலையம் மூடப்படும்.

ஆரம்ப கட்டமாக விமான நிலையம் மூன்று மாதங்களுக்கு மூடப்படும் என்றும் அதன் பின்னர் பாதுகாப்பு நிலைமையை அனுசரித்து முடிவு செய்யப்படும் என்றும் சிவில் நிர்வாக சேவை செயலாளர் நாயகம் பராக்கிரம திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் இப்போது தினமும் இரவு பகலாக 70 சேவைகளைக் கையாண்டு வருகின்றது. இரவு சேவை நிறுத்தப்படுவதால் 40 சதவீதம் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## வவுனியா வடக்கு போர் முனையில் யுத்தம் வெடிக்கும் அறிகுறி

கொழும்பு, மே 4

வவுனியாவுக்கு வடக்கே உள்ள போர் முனையில் தாக்குதல் ஆரம்பமாகும் அறிகுறி காணப்படுகின்றது என்று சர்வதேச செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்துள்ளது.

இத் தாக்குதலுக்கு முன்னோடியாக - வவுனியா முன்னரங்க நிலையில் விடுதலைப் புலிகள் இப்போது விட்டு விட்டு தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இத்தகைய ஒரு தாக்குதலில் நேற்று பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில், இடம்பெற்ற இத் தாக்குதலில் கான்ஸ்டபிள் ஆர்.அடி.சிஸில்குமார என்பவர் கொல்லப்பட்டுள்ளார்.

வடக்கு போர் முனையில் தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக இத் தாக்குதல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவருகின்றனர் என்று மேற்படி செய்தி ஏஜென்சி தகவல் வெளியிட்டுள்ளது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய ஆசிரியை திருமதி சிவசீலா பிரபாகரன்
அவர்களது பாசமிகு தந்தை
**அமரர் தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
அவரது ஆத்மாசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(60306) அதிபர், ஆசிரியர், கல்விசாரா ஊழியர்கள்.
யா/உசன் இராமநாதன் ம.வி., உசன், மிருசுவில்.

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்கத்தின் உறுப்பினர்
செ.கந்தசாமி
அவர்களின் பாசமிகு மனைவி
**திருமதி சிவாம்பிகை கந்தசாமி**
அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு,
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.

உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் சங்கம்
வடபகுதி.
(60249)

## Calling for Tenders
## Teaching Hospital, Jaffna

**Renovation to Drivers room & linen room**

*1. The Chairman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Renovation to Drivers room & linen romp. up to 10 a.m -on 18/5/2007. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 11/5 / 2007 on payment on honrefundable deposit of Rs. 2000/=*

*2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.*

*3. Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka. (NCCASL)*

*4. Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director, T.H. Jaffna or deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10 a.m on 18/5/2007.*

*5. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB,T.H.Jaffna.*

*6. For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.*

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital, Jaffna.*
*Date: 3/5/2007.*

## மரண அறிவித்தல்கள்

### சுப்பையா ஆறுமுகம் (முன்னாள் புடைவை வியாபாரி)



கென்னடிலேன், திருநெல்வேலி கிழக்கை பிறப்பிடமாகவும் இராமநாதன் வீதி கலட்டி, கோப்பாய் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா ஆறுமுகம் நேற்று (03.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அன்னலெட்சுமியின் அன்புக் கணவராவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.05.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
கலட்டி, இராமநாதன் வீதி,
கோப்பாய் தெற்கு.

### தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம்

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமகாவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வைத்திலிங்கம் நேற்று (03.05.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - அமுதுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சோமசுந்தரம் - சிவசோதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற லிங்காவதியின் அன்புக் கணவரும் சிவரூபி (ஜேர்மனி), சிவசீலா (ஆசிரியை, உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகதாஸ் (ஜேர்மனி), பிரபாகரன் (உசன்) ஆகியோரின் அன்பு மாமனும் தமிரா, டர்சிகன், கார்த்திக் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற விநாசித்தம்பி, இராஜகுலசிங்கம், செல்வரத்தினம், சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (03.05.2007) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சிவசீலா (மகள்),
பிரபாகரன் (மருமகன்)
உசன், மிருசுவில்.
கலைவாணி மில்லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

## நல்லூரில் பக்தர்களின் சைக்கிள்கள் திருட்டு

யாழ்ப்பாணம்,மே4
சித்திரா பௌர்ணமி தினத்தன்று நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற உற்சவத்தில் பங்குபற்றிய இரு பக்தர்களின் வாகனங்கள் திருடிச் செல்லப்பட்டன.

பக்தர் ஒருவரின் மோட்டார் சைக்கிலும், ஆலயப் பூசகரின் சைக்கிலும் பூட்டப்பட்ட நிலையில் ஆலய வாசலின் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றின் பூட்டை உடைத்து இனந் தெரியாத நபர்கள் திருடிச் சென்றுவிட்டனர். (அ-1-79-111)

## வது பிறந்தநாள் வாழ்த்து

மில் வீதி உடுப்பிட்டியைச் சேர்ந்த றமேஸ்-வசந்தி
(விசாகா வீடியோ அன் போட்டோ) தம்பதிகளின்
செல்வப்புதல்வன்
**ஹரிஸ்றாகவன்**
தனது முதலாவது பிறந்தநாளை இன்று
(04-05-2007) வெள்ளிக்கிழமை
வெகு விமரிசையாகக்கொண்டாடுகிறார்.





இவரை அன்பு அப்பா அம்மா அப்பப்பா அப்பம்மா
டோகாவில் இருக்கும் சுரேஸ்சித்தப்பா
இத்தாலியில் இருக்கும் கண்ணன் சித்தப்பா
சுமதியத்தை தோஅத்தை வனிதாஅத்தை காந்தன்மாமா
மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும்
உடுப்பிட்டி ஞானவைரவர் அருளால்
சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகிறார்கள்

எஸ்.சுரேஸ்(டோகா) . எஸ்.கண்ணன்(இத்தாலி)

## இலங்கை மின்சார சபை - யாழ். பிரதேச அலுவலகம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் அவசர திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு நாளை (05.05.2007) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதை மின் பாவனையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். வேலைகள் முன்னதாக முடிவுற்றால் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்கு முன்பும் மின்சாரம் வழங்கப்படலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சியமார் கோயிலடி, யாழ்ப்பாணப்பட்டினம் (யாழ். போதனா வைத்தியசாலை, பஸ் தரிப்பிடம் தவிர்ந்த ஏனைய பகுதிகள்), ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி. இதனால் மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துகின்றோம்.

இலங்கை மின்சார சபை
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம். 2007.05.03

பிரதேச மின் பொறியியலாளர்

'சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்'
இலங்கை மின்சாரசபை. (சி-52344)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2006 க.பொ.த. (சா/த) பெறுபேறு
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

- டர்ஷியா சிவசுதன் - 7A, B, 2 C
- சர்வானந்தம் சஞ்சயன்- 4A, B, 3 C, S
- வினித்தா யோகேந்திரன் - 4A, C, 4S
- லொசாந்தினி நடராஜா - 3A, 3 C, 2S

மேற்படி விசேட சித்திகளைப் பெற்றுள்ள மாணவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர்களின் சிறந்த பெறுபேறுக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(60304)
பழையமாணவர் சங்கம்,
யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்.

## BARATHY
**சித்தன்கேணி**

## A/L - 2009

புதிய பிரிவு நடைபெறுகின்றன
Com. Maths - விஜேந்திரன் B.Sc.
Chemistry - கிருபாகரன் B.Sc.
Physics - சாரங்கன் B.Sc.

**A/L - 2008 புதிய அலகு**
Com. - Maths - S.H.M.
Che. - சேதன இரசாயனம்

**2007 - PAPER CLASS**
மாதிரி வினா விடையுடன்
நடைபெறுகின்றன.

## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம். இணுவில்.

**2009 A/L**

பொருளியல்- சுதாகரன் B.Com (Hons)
கணக்கீடு - முகுந்தன் B.B.A. (Hons)
வணிகக்கல்வி - முரளி B.B.A. (F.M. spl)
சனி - ஞாயிறு வர்த்தகப்பிரிவு
யாழ். நகரில் - 9-12 மணி வரை
இணுவில் - 1 - 4 மணி வரை

**2009**
**கலைப்பிரிவு**

இரு [illegible] புதிய பிரிவு
[illegible] நடைபெறுகின்றன.

## கடை வாடகைக்கு

யாழ். நகர், கே.கே.எஸ். வீதியில் கடை வாடகைக்குண்டு (வண்ணை சிவன் கோயில் அருகில்).
தொடர்பு: ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி,
426 (302), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**



விஜய், அசின், வடிவேல்
நடித்த
**போக்கிரி** (றீல்ஸ்)
தினசரி : 10.45-2.45மணி.

## BARATHY
**சித்தன்கேணி**

## O/L DAY CLASS

**பிரிவு I** இற்கு அனுமதிகள்
100 பேருடன் நிறுத்தப்பட்டுள்ளன.
பிரிவு 2 - ஆரம்பம் 07.05.2007 திங்கள்
காலை 8 மணி
புதிய அனுமதிகளை
பெற்றுக்கொள்ளுங்கள்

## A/L - 2009

கலை, வர்த்தகப்பிரிவு
புதிய வகுப்புகள் ஆரம்பமாகி
நடைபெறுகின்றன.

**யாழ். நகரின் பிரபல்யம் பெற்ற**
**ஆசிரியர் குழுவினால்**

## Calling for Tenders
## Teaching Hospital, Jaffna

**Paintinng: to Hospital Kitchen**

*1. The Chairman of the divisional tender board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for painting to hospital kitchen up to 10 a.m on 18/5/2007. Tender forms may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 11/5/2007 on payment on nonrefundable deposit of 1000/-*

*2. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tendere-rs or their authorized representatives are requested to be present at the opening of tenders.*

*3. Tender forms are issued only to contractors having valid registration in grade M 7 and above in the field of building construction and other institute of construction training and development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors Association of Sri Lanka.(NCCASL)*

*4. Sealed tenders may be Despatched either by registered post or hand delivered to Director,T.H.Jaffna of deposited in the tender box at Teaching Hospital, Jaffna on or before 10 a.m on 18/5/2007.*

*5. Tender documents may be inspected free of charge at the resident Engineer's office CECB,T.H.Jaffna.*

*6. For further details please contact Hospital Secretary, T.H.Jaffna.*

*The Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital, Jaffna.*
*Date: 3/5/2007.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிமெந்தின் விற்பனை விலை ரூபா 1200: அதிகரித்து விற்போர் மீது சட்ட நடவடிக்கை

## யாழ். அரச அதிபர் அறிவுறுத்து

நல்லூர்,மே 4

ஐம்பது கிலோகிராம் நிறையுடைய சிமெந்துப் பக்கெற் ஒன்றின் விற்பனை விலை ஆயிரத்து 200 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதிகரித்த விலையில் விற்பவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று யாழ். அரச அதிபர் கே.கணேஸ் அறிவுறுத்தியுள்ளார்.

குடாநாட்டிற்கான ஏ-9 பாதை மூடப்பட்டதை அடுத்து இங்கு சிமெந்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. தொடர்ந்து வந்த காலங்களில் சிமெந்து தாராளமாக எடுத்து வரப்பட்டபோதும் கூடுதல் விலைக்கே - 2மடங்கு அதிகரித்த விலைக்கு விற்கப்பட்டது.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு யாழ் அரச அதிபர் சிமெந்திற்கான ஆகக் கூடிய சில்லறை விற்பனை விலையை ஆயிரத்து 200 ரூபாவாக நிர்ணயித்துள்ளார்.

இந்த விலைக்குக் கூடுதலாக விற்பனை செய்யக்கூடாது. அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் -

விலைப்பட்டியல் மக்களின் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என்றும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார். (202-111)

# கைதுகள், காணாமற் போனவர் தொடர்பாக ஐ.சி.ஆர்.சியில் ஏப்ரலில் 122 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,மே 4

நாட்டின் பல பகுதிகளிலும் கடந்த மாதம் இனந்தெரியாதவர்களால் கடத்தப்பட்டதாக 58 முறைப்பாடுகளும் கைதுகள் தொடர்பாக 64 முறைப்பாடுகளும் செஞ்சிலு வைச சர்வதேசக் குழுவில் பதிவுசெய்யப் பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏப்ரல் மாத அறிக்கையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த மாதம் குழுவின் விசேட விமானம் மூலம் யாழ்ப்பாணத்திலிருந்து 34 நோயாளர்கள் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மருந்துப் பொருள்களும் மருத்துவ உபகரணங்களும் யாழ். போதனா வைத்திய சாலைக்கும் சுகாதார சேவைகளின் பிரதிப் பணிப்பாளருக்கும் எடுத்துவரப்பட்டன.

குழுவின் சத்திரசிகிச்சைப் புத்தகங்களில் ஒரு தொகுதி யாழ். போதனா வைத்திய சாலைக்கு வழங்கப்பட்டன - என்றுள்ளது.

## இராணுவத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், மே 4

பலாலி இராணுவ வைத்தியசாலை மருத்துவர்களால் 513ஆவது இராணுவ படையணியின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய் மற்றும் நயினாதீவு ஆகிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டுள்ளது.

யாழ். பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் கடந்த திங்கட்கிழமை மானிப்பாய் மகளிர் கல்லூரியில் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் 500இற்கு மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர். அவர்களுக்குத் தேவையான மருந்துகளும் இலவசமாக வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமுக்கு வந்தவர்களுக்கு வெசாக் தினத்தை முன்னிட்டு பகல் உணவும் வழங்கப்பட்டது. (202)

## முதுமாணிப் பரீட்சைக்கு அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், மே 4

முதுமாணிப் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் எதிர்வரும் 14ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளன. பரீட்சைகள் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன. (202-95)

## மட்டுவிலில் கண்காட்சி

யாழ்ப்பாணம்,மே4

கியூடெக் நிறுவனம் மட்டுவில் வடக்கு சந்திரபுரம் பிரிவு சமூக விழிப்பூட்டல் பிரிவினரால் மட்டுவில் அ.த.க. பாடசாலை மண்டபத்தில் உள்ளூர் கைப்பணிக் கண்காட்சி ஒன்று கடந்த வாரம் நடத்தப்பட்டுள்ளது.

நிகழ்வில் கியூடெக் அமைப்பைச் சேர்ந்த ஜோசப் பாலா ஜீவகாந்தன், மட்டுவில் அ.த.க. பாடசாலை அதிபர் க.இராசதுரை ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். (203)

## நுண்கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம்,மே 4

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நடத்தும் இலவச நுண்கலை வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்க வகுப்புகளே நடைபெற்று வருகின்றன.

நல்லூர் ஆலய முன்றிலில் உள்ள நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டுவரும் இலவச நுண்கலை வகுப்புகளில் இணைந்து கொள்ள விரும்புவோர் உடனடியாக நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் கேட்டுள்ளார். (79)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம்,மே4

தென்மராட்சி கல்வி வலயத்தினர் செயற்பாட்டுத் திட்டத்தின்கீழ் உயர்கல்வி ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான ஆரம்ப கணித செயற்பாட்டுப் பயிற்சிப் பட்டறை நாளை சனிக்கிழமை அல்லாரை அ.த.க. பாடசாலையில் நடத்தவுள்ளனர்.

மாணவர்களின் பெற்றோருக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதால் பெற்றோர்களையும் பட்டறையில் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்தார். (1-207)

* * *

தொழிற்றுறை திணைக்களம், டபிள்யூ.யூ.எஸ்.சி. ஆகியவற்றின் அனுசரணையுடன் இயங்கும் இளைஞர் கணனி சேவையினர் ஜிஐரி, ஐசிரி மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளை நடத்தவுள்ளனர்.

பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் யாழ்.சீனிவாசகம் வீதியில் இயங்கும் நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

தென்மராட்சியில்

# கிராம, மகளிர் அபிவிருத்திச் சங்கங்கள் புதிய பதிவு இலக்கம் பெற அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,மே4

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஆகியவற்றுக்கு புதிய பதிவு இலக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பதிவு இலக்கங்கள் தற்போது இரு மாகாண சபைகளாக உருவாக்கப்பட்டதையடுத்து இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

எனவே, வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்திற்கு சங்கங்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பி புதிய பதிவு இலக்கங்கள் பெறப்படல் வேண்டுமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் என்பன பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202-207)

# சர்வதேசத்தையும் தமிழர்களையும் ஏமாற்றும் மற்றொரு நாடகமே அரசின் தீர்வு யோசனை

## மட்டக்களப்பு எம்.பி. அரியநேத்திரன் கண்டனம்

கொழும்பு, மே 4

சர்வதேச சமூகத்தையும், தமிழர்களையும் ஏமாற்றுவதற்கென அரசினால் முன்வைக்கப்பட்ட மற்றொரு நாடகமே தற்போது முன்வைக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்வு யோசனை.

இவ்வாறு தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

அவரது அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கையின் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் காலத்துக்குக் காலம் தமிழர் பிரச்சினைகளுக்கான தீர்வு என்கின்ற பேரில் கிளப்பிவிடும் புரளிகளும் அவற்றை புதுமையாக தமிழ் சமூகத்துக்கும், சர்வதேசத்திற்கும் காட்ட முற்படும் நாடகங்களும் தொடர்ந்து அரங்கேறிக் கொண்டேயுள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டு தொடக்கம் தமிழ் மக்களின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென தமிழ் அரசியல் தலைவர்கள் பல வழிகளிலும் பற்பல அகிம்சைப் போராட்டங்களை நடத்தி வந்தனர். அவர்களின் தார்மீகக்கோரிக்கைகள் உதாசீனம் செய்யப்பட்டமையினால் 1976 மே 14ஆம் திகதி யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தலைமையில் 'தமிழீழப் பிரகடனம்' செய்யப்பட்டு அதற்கான அங்கீகாரம் 1977 ஜூலை 23 ஆம் திகதி இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களால் வழங்கப்பட்டது.

ஆயுதப் போராட்டத்தின் பின்பு பல இராணுவ வெற்றிகளை விடுதலைப் புலிகள் ஈட்டியதன் எதிரொலியாக 2002 பெப்ரவரி 22ஆம் திகதி சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் போர்நிறுத்த உடன்படிக்கை விடுதலைப் புலிகளுக்கும் அப்போதைய அரசாக இருந்த ரணில் விக்கிரம சிங்கவிற்கும் இடையில் கைச்சாத்தானது.

இன்றுவரை அந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதாக புலிகளோ அரசோ அறிக்கவில்லை. அரசு இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு அரசியல் தீர்வுத் திட்டத்தை சர்வதேசத்துக்குக் காட்டவேண்டிய ஒரு நாடகமாகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்ட உப்புச்சப்பற்ற தீர்வுயோசனை அமைந்துள்ளது.

மாகாணசபைகளை மாவட்டசபைகளாக மாற்ற ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு முதலமைச்சர் நியமிப்பது என்பது உண்மையில் தமிழ் மக்களை திருப்திப்படுத்தும் தீர்வாக அமையாது. அது சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

எதிர்காலத்தில் கிராமத்துக்கு ஒரு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமே இல்லை. இந்த யோசனையை ஏனைய தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளுமா என்பதுகூட கேள்விக்குரியதே.

எனவே, இந்தத் தீர்வுத் திட்டமானது சர்வதேசத்தையும் ஒட்டுமொத்தமான தமிழ்ச் சமூகத்தையும் ஏமாற்றியுள்ளது என்பதை தெளிவாக அறியமுடியும் - என்று அதில் குறிப்பிட்டுள்ளார். (சி)



சாவகச்சேரியில் நிர்மாணிக்கப்பட்ட தென்மராட்சி கலை மன்றக் கட்டடத்தினை யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் நாடாவெட்டி திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். அருகில் தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், முன்னாள் உதவி அரசாங்க அதிபர் க.துரைராசா ஆகியோரும் காணப்படுகின்றனர்.

## ஈஸ்வரம்மா தின விழா

யாழ்ப்பாணம்,மே4

பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் நடத்தும் ஈஸ்வரம்மா தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நிலையத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் விளையாட்டுகள், கலை நிகழ்வுகள், சொற்பொழிவு என்பனவும் இடம்பெறும். (202)

## தியானப் பயற்சி

யாழ்ப்பாணம்,மே4

சிவலிங்க யோக கேந்திரா நிலையம் நடத்தும் தியானப் பயிற்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி, கலாசாலை வீதியில் உள்ள பழம்கிணற்றடிப்பிள்ளையார் திருமண மண்டபத்தில் நடைபெறும்.

'மனிதனின் ஆளுமை விருத்திக்குத் தியானம்' என்னும் தலைப்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் உளவளத்துணையாளர் நா.நவராஜ் தியானப் பயிற்சி வழங்குவார். (202)

## கல்வியியல் செயலமர்வும் கொடுப்பனவு வழங்கலும்

யாழ்ப்பாணம்,மே4

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் உள்ளகப் பயிற்சி பெறும் ஆசிரியர்களுக்கு ஏப்ரல் மாதத்துக்கான செயலமர்வும் கொடுப்பனவு வழங்கலும் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறும் என பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தெரிவித்தார். (202)

ஸ்ரீ.ல.சு.க. தீர்வு யோசனையின் இறுதி வடிவத்தில்

# எமது மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையேல் முஸ்லிம் காங்கிரஸ் அரசிலிருந்து விலகும்

## செயலாளர் நாயகம் ஹசன் அலி சொல்கிறார்

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி விரைவில் முன்வைக்கவுள்ள தீர்வு யோசனைகளின் இறுதி வடிவம் தேசியப் பிரச்சினையுடன் ஒன்றிணைந்த முஸ்லிம்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் விதத்தில் அமையாவிட்டால் அரசில் இருந்து விலகிவிடப் போவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

தற்போது ஸ்ரீல.சு.கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுயோசனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக அக்கட்சியின் அரசியல் உயர்பீடம் அடுத்தவாரம் கூடவுள்ளது என்றும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹஸன் அலி 'உதயனு'க்குக் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்டத்தால் அனைவரும் ஏமாற்றப்பட்டுள்ளனர். அரசுக்கு வெளியேயுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் மாத்திரமின்றி அரசுடன் இணைந்திருக்கின்ற அரசியல் கட்சிகளும் அத்தீர்வுத் திட்டத்தை எதிர்க்கின்றன.

இத்தீர்வுத்திட்டம் எவ்வகையிலும் தேசியப் பிரச்சினையை ஒருபோதும் தீர்க்க முடியாது. இந்த முறைமை 25 வருடங்களுக்கு முந்திய பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையக்கூடியது. ஆனால், தற்போது எழுந்துள்ள பிரச்சினை வேறு. அப்பிரச்சினையை இந்த முறைமையின் ஊடாகத் தீர்க்கமுடியாது. இது அனைவரையும் ஏமாற்றும் செயல்.

இருந்தாலும் இத்தீர்வுத்திட்டம் இறுதியானது அல்ல என்றும் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து மிகவிரைவில் இறுதித் தீர்வு யோசனை முன்வைக்கப்படும் என்றும் அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்திருக்கின்றார்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தில் எமக்குத் திருப்தியில்லாதபோதிலும் இது தொடர்பாக எமது கட்சியின் அரசியல் உயர்பீடம் கூடி ஆராயவுள்ளது - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னிந்திய திருச்சபை - யாழ். ஆதீனம்
## சமயக் கல்விக் குழு

★ தொடர் கருத்தமர்வு II - கிறிஸ்தவம்
★ காலம் : நாளை (05.05.2007) சனிக்கிழமை காலை 9மணி - 12மணிவரை
★ இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு,
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி முன்பாக)

விடயம் :
**பவுலடிகளாரின் திருமுகங்கள் அப்போஸ்தலர் பணி**

★ கருத்துரை வழங்குபவர் :
திருமதி சுனீதா லெனின்சியா (B.A. (Hons), Dip. in Edu.)
(ஆசிரியை, கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி)

★ 2007 ஓகஸ்ட் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
★ பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

ஒருங்கிணைப்பாளர்,
(60242) சமயக்கல்விக் குழு, பரீட்சைகள் பிரிவு.


## மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம்
## பாராட்டும் நன்றியும் - 2006 க.பொ.த. (சா/த)

| | |
|---|---|
| ச.தேவப்பிரியா 7A, 2B,S | இ.சுலக்ஷன் 4A, B, 2C, 2 S |
| ஜோ.அஜித்தா 4A, 2B, 3C, S | இ.சர்மிலன் 3A, B, 4C, 2 S |

இவர்களோடு உயர்தர வகுப்பிற்குத் தகுதியான ஏனைய 16 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்தோடு,

| 2004இல் | 2006இல் |
|---|---|
| 8% மான சங்கீதம் | 95% ஆகவும் |
| 47% மான தமிழ் | 92% ஆகவும் |
| 56% மான சமயம் | 92% ஆகவும் |
| ---- நடனம் | 100% ஆகவும் |
| 34% மான சமூகக்கல்வி | 60% ஆகவும் |
| 31% மான விவசாயம் | 57% ஆகவும் |
| 42% மான வணிகக் கல்வி | 54% ஆகவும் |
| 24% மான உயர்தர தகைமை | 45% ஆகவும் |

04 இடங்கள் வலய மட்ட மெய்வன்மைப் போட்டி 26 இடங்கள் ஆகவும்
வலய மட்ட சதுரங்கம் (குழு) 3 இடங்கள் ஆகவும்

உயர்ச்சி அடையச் செய்த ஆசிரியர்களுக்கும் இவர்களை வளப்படுத்திய அதிபர் கு.கதிர்காமசேகரர் அவர்களுக்கும் இவர்கள் அனைவரையும் உத்வேகத்துடன் நெறிப்படுத்திக்கொண்டிருக்கின்ற வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி/52321) **- பெற்றோர், பழைய மாணவர்கள்.**


### விற்பனைக்கு

ஐஸ் கிரீம், ஐஸ் பழம் தயாரிக்கும் பாத் இயந்திரம், கொம்பிரசர் மற்றும் டிபிரசர் போன்றவை விற்பனைக்கு உண்டு.

வி.புவனேந்திரன்
ஆதியாமலை, தொ.பே.: 021 226 4142
உடுப்பிட்டி. (60243)

### கப்பல் சேவை

புகையிலை, சுருட்டு, வெங்காயம் மற்றும் பனை உற்பத்திப் பொருள்கள் கப்பல் மூலம் திருகோணமலைக்கு அனுப்ப விரும்புபவர்கள் கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

G.திருவருள்
KOBIRAJA TRANSPORT
கந்தரோடை மேற்கு, சுன்னாகம்.
தொ.பே. 0773638459
(66187)



பாக்யா இசைப்பயிலகம்
மணியர்பதி வீதி கொக்குவில் மேற்கு
0773053129

### இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு
பிருந்தாவன் கல்லூரி
பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்
B.Sc.
B.B.M.
B.C.A.
B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தர) 2 பாடங்களில் சித்தி

பதிவுகள் தற்போது மேற் கொள்ளப்படுகின்றன

**Company Secretarial Services(Pvt.)Ltd.**
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

**1st in Com. G.A.Q.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (வெளிவாரி)**

✱ புதிய ஆண்டிற்கான பதிவுகள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.
✱ புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
✱ B.Com. Part I இற்குரிய விரிவுரைகள்
ஆரம்பம் :- 05.05.2007 காலை 9 மணி

நிர்வாகி :- S.அருள்நங்கை
புதிய உயர்கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(60241)

### பயிற்சிப் பட்டறை (Work Shop)

தொழிற்றுறைத் திணைக்களம் WUSC ஆகியவற்றின் அனுசரணையில் இயங்கும் இளைஞர் கணனி சேவையினரால் GIT, ICT மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை நடத்த உள்ளோம். பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் தொடர்பு கொள்ளவும்.

**Youth Computer Services**
15A, Seenivasagam Road, Jaffna.
T.P.: 0779353154, 0779597106
(சி/52336)


## ஈரவிழிகளுடன் 41ஆம் நாள்....

அன்னை மடியில் 17 - 05 - 1988



மண்ணின் மடியில் 25 - 03 - 2007

### அமரர் சூசைநாதன் டனிலஸ்றாஜ்

எம் செல்வமே!
பத்து வருடம் தவமிருந்தோமடா உன்னைப் பெற்றெடுக்க
ஆனால் பிறந்து பத்தொன்பது வருடத்திலேயே
பிரித்துவிட்டார்களடா உன்னை மறுமுறை காணும்வரை
எம் ஈரவிழிகள் ஓயாதடா
உன் ஆன்மா இறைவனிடம் அமைதிபெற
மன்றாடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லையடா

மாறாத கண்ணீருடன்:
வே.சூசைநாதன் (சின்னையா - தந்தை),
சூ.அன்னம்மா (தாய்), உறவினர்கள்.

பெரியவிளான்,
இளவாலை. (60303)

## அழியா நினைவுகளுடன்...

### 170ஆம் நாள் 31ஆம் நாள்



அமரர்
**சந்திரசேகரம் குலசிங்கம்**
தோற்றம் 18.01.1935 மறைவு 17.11.2006

திருமதி
**ஜெயபூபதி குலசிங்கம்**
தோற்றம் 25.12.1940 மறைவு 05.04.2007

ஆண்டவனே ஆங்கிலத்தில் உமக்கு சந்தேகம் வந்ததேனோ
ஆங்கில அகராதிகளை எனவேதான் கவர்ந்தனையோ
அன்பான இதயங்கள் இன்று ஆண்டவனின் அரவணைப்பில்
உபசரிக்கும் உள்ளங்கள் இன்று உந்தன் திருவடியில்
பூப் போன்ற மனம் கொண்ட பூபதியே!
சிங்க நடைகொண்ட சிங்கக் குலத்தவனே!
அறிவு கொண்ட எம் உளத்தில் நீவிர்
ஏற்றிவைத்த உலக மொழி என்றுமே உயிர் வாழும்.

எமது குடும்பத் தலைவி திடீர் சுகயீனம் உற்றபோது எமக்கு உதவிய சென் ஜோன்ஸ் அன்புலன்ஸ், யாழ். வைத்தியசாலை அவசர, அதிதீவிர சிகிச்சை பிரிவு வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்கள், அஞ்சலிப் பிரசுரங்கள், பத்திரிகைகள், மலர்வளையங்கள் மற்றும் நேரில் அஞ்சலி செலுத்தியோர்க்கும் தொலைபேசி, தந்தி மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு, நாளை (05.05.2007) சனிக்கிழமை காலை இடம்பெறும் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் அவர்களின் அந்தியேட்டி கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**(தயவு செய்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)**

214, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2438 (60303)

உங்கள் பிரிவின் துயரிலிருக்கும்:
**பிள்ளைகள், மருமக்கள்.**

## 31ஆவது நாள் நினைவஞ்சலி

### திருமதி நடராசா சிவபாக்கியம்



தோற்றம் 26-03-1928 மறைவு 04-04-2007

திருப்பணிச் சபை உறுப்பினர் த.கணேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாய்
**திருமதி நடராசா சிவபாக்கியம்**
அவர்களுக்கு எமது அஞ்சலியை செலுத்துகிறோம்.

திருப்பணிச் சபை,
ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதிமூர்த்தி தேவஸ்தானம்,
வண். - வடமேற்கு.
(60238)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் நாகலிங்கம் ஐயாத்துரை

தோற்றம் 19✱11✱1919 மறைவு 04✱04✱2007

சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரண நிகழ்வும் வீட்டுக்கிருத்தியமும் நெடுந்தீவிலுள்ள எமது இல்லத்தில் இன்று (04.05.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும். இந்நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

'திருவேர்கம்'
12ஆம் வட்டாரம், நெடுந்தீவு. (60194)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் சிவசக்தி இராஜ்குமார்

தோற்றம் 11★06★1968 மறைவு 04★04★2007

கடந்த 04.04.2007 அன்று சிவபதமெய்திய எங்கள் அன்புத் தெய்வம் சிவசக்தி இராஜ்குமார் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.05.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்விற்குத் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible], பெரியரசடி, சாவகச்சேரி. (60175)

**- குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சு.கவுக்கு தமிழரின் நன்றி!

தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான யோசனை என்ற பெயரில் ஆளும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்த திட்டம் தமிழர் தரப்பை மட்டுமல்ல, இலங்கை விவகாரத்தை ஆழ உற்றுநோக்கும் பக்கச்சார்பற்ற பார்வையாளர்களையும் சர்வதேச சமூகத்தையும் கூட அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியிருக்கின்றது. இராஜதந்திர வட்டாரங்கள் இவ்விவகாரம் குறித்து வெளிப்படுத்தும் பிரதிபலிப்புகள் இதனையே உணர்த்துகின்றன.

நாட்டில் பெரும் யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்த நிலையில் - தமிழருக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கைகள் கட்டுமட்டில்லாமல் இடம்பெற அனுமதித்த சூழலில் - சுமார் ஒருவருட காலம் இழுத்தடித்த பின்னர் - 'மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாக' ஒன்றுக்குமே உதவாத, உருப்படியற்ற ஒரு திட்டத்தை தீர்வு யோசனையாக முன்வைத்திருக்கின்றது ஆளும் கட்சி.

தமிழர் தரப்பு ஒட்டுமொத்தமாக - ஓரணி சேர்ந்து - இந்த யோசனைத்திட்டத்தை அடியோடு நிராகரித்திருக்கின்றமை ஆளும் தரப்புக்கு நல்லதோர் அடி.

விடுதலைப்புலிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மட்டுமல்ல, தமிழர் தரப்பில் அனைத்துக் கட்சிகளுமே இதனை நிராகரித்து விட்டன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ. பி. டி. பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மேலக மக்கள் முன்னணி மற்றும் ஆனந்தசங்கரி - புளொட் சித்தார்த்தன் - பத்மநாபா அணி ஆகியவை ஒன்றிணைந்த கூட்டமைப்பு என்பனவும் தமிழர் தரப்பைப் பிரதிபலிக்கும் தொழிற்சங்கங்கள், பொது அமைப்புகள் எல்லாமே இந்த யோசனையைக் காட்டமாக விமர்சிக்கத் தொடங்கிவிட்டன.

இந்த யோசனை மஹிந்த அரசின் திட்டமாக முன்வைக்கப்படவில்லை. அதுபோலவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைப் பிரேரிப்பதற்காக கொழும்பு அரசு அமைத்துள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இறுதியான சிபாரிசும் இதுவல்ல. ஆக, அந்தக் கமிட்டிக்கு ஆளும் அரசுக் கூட்டமைப்பின் பிரதான கட்சியான சுதந்திரக் கட்சி சமர்ப்பித்த யோசனைத் திட்டம்தான் இது. அப்படியிருக்க இதை ஏன் முடிந்த முடிவாக எடுத்து இவ்வளவு ஆரவாரம் போட வேண்டும் - எதிர்ப்புக் காட்டவேண்டும் - என்று சில தரப்புகளில் முணுமுணுப்பு வெளிப்படுத்தப்படுகின்றது.

அவர்கள் கூறுவதில் உண்மை இல்லாமல் இல்லை. ஆனாலும் அதற்கு அப்பாலும் சில விடயங்கள் இதில் பொதிந்துள்ளன. அதனால்தான் இந்தத் திட்டத்தைக் கண்டு தமிழர் தரப்பு இப்படிச் சீறுகின்றது.

சு. க. தான் ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சி. அக்கட்சியின் தலைவர்தான் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டை வைத்திருப்பவர். அந்தக் கூட்டமைப்பின் அரசுக்கும் அவரே தலைவர். அத்தோடு நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் அவரே.

அத்தகையவரைத் தலைவராகக் கொண்ட ஆளும் கட்சியின் யோசனைத் திட்டம் இது. அமைதி வழியில் - சமாதான முறையில் - இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமானால் இத்தகைய யோசனைத் திட்டத்தை முன்வைத்த கட்சியினதும், அதன் செல்வாக்கு அதிகமுள்ள இந்த அரசினதும், அக்கட்சி மற்றும் அரசின் தலைவரான ஜனாதிபதியினதும் இணக்கமும், உடன்பாடும், ஒத்துழைப்பும் அதற்கு அவசியமானவை என்பது கண்கூடு.

அவ்வாறு சமரச எத்தனங்கள் மூலம் சுமுகமான தீர்வைக் காண்பதாயின் அந்த முயற்சியில் இந்த அரசு, இந்த அரசின் பிரதான கட்சி, அதன் தலைவர் ஆகிய தரப்புகளின் விட்டுக்கொடுப்பும் தாராளமும், நியாயப்போக்கும் எவ்வளவு தூரம் விரிந்து கொடுக்கும் என்பதை உரைத்துப் பார்ப்பதற்கு இந்த யோசனைத்திட்டம் நல்ல அளவுகோலாகும்.

இந்த அளவுகோலின் அடிப்படையில்தான் தமிழர் தரப்பின் எதிர்ப்பு இப்போது பீறிட்டுப் பிறந்திருக்கின்றது.

தமிழர் தொட்டுக்கூடப் பரிசீலிப்பதற்கு லாயக்கற்ற ஒரு திட்டத்தையே தீர்வுக்கான யோசனையாகக் கொண்டிருக்கும் ஒரு கட்சியுடன் - அந்தக் கட்சியைப் பிரதானமாகக் கொண்ட அரசுடன் - அந்த அரசினதும், கட்சியினதும் தலைவராக உள்ள ஜனாதிபதியுடன் - தமிழர் எதைப் பேசி, எதைப் பெறுவது?

இதுவரை, இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டு, தோற்றுப்போன சகல யோசனைகளையும் விட மோசமான - பலவீனமான - வலுவற்ற - திட்டம் இது. தமிழர்கள் தமது பிரச்சினைக்குத் தீர்வு என்று பரிசீலிப்பதற்கு எந்த ஓர் அடிப்படையுமற்ற வெறும் காகிதாதியே அந்த யோசனைத் திட்ட ஆவணம்.

தென்னிலங்கையின் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளையும் யுத்த வெறியர்களையும் திருப்திப்படுத்தும் நோக்கில் இந்த உருப்படியற்ற அரைவேக்காட்டுத் திட்டம் ஒன்றை முன்வைத்திருக்கும் ஆளும் கூட்டமைப்பின் பிரதான கட்சி, அதன் மூலம் தமிழர் தரப்புக்கு ஒரு நன்மையும் சேர்த்திருக்கின்றது என்பது நோக்கற்பாலது.

தமிழர்களுக்கு, அவர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யும் தீர்வு ஒன்றை வழங்கும் தாராளமோ அதற்கான நல்லெண்ணமோ தென்னிலங்கைக்குக் கிடையவே, கிடையாது என்பதை சர்வதேச சமூகத்துக்கு இதன்மூலம் எடுத்துக்காட்டியிருக்கும் அக்கட்சி, அதன் வாயிலாக தமிழ் மக்களின் - விடுதலைப் புலிகளின் - உரிமைக்கான போராட்டத்தின் நியாயத்தை சர்வதேசம் புரிந்துகொள்ளவும் சர்தார்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றது.

தென்னிலங்கைச் சிங்களத்துக்குள் ஊறிப் பொதிந்து, ஊதிப் பெருத்து, ஆக்கிரமித்துக் கிடக்கும் பேரினவாத மேலாண்மையையும் சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்கும் அதிகாரப் போக்கையும் சர்வதேசம் மீண்டும் ஒரு தடவை அளவிட்டு, அறிந்துகொள்வதற்கு வாய்ப்பளித்தமைக்காக ஜனாதிபதி மஹிந்தர் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தமிழர் தரப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து நன்றி தெரிவிக்க வேண்டும். அதுவும் ஒருவகையில் நியாயமே.

## ஆலயத் தர்மகர்த்தாவும் குருக்களும் காங்கேசனில் தடுத்து வைத்து விசாரணை

யாழ்ப்பாணம், மே 4

வேலணை பெருங்குளம் ஆலயக் குருக்கள் மற்றும் தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆகிய இருவரையும் காங்கேசன்துறையில் தடுத்துவைத்து விசாரணை செய்வதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

மேற்படி ஆலயத்தில் தேர்முட்டியில் ஆயுதப் பொதி ஒன்று செவ்வாய்க்கிழமையன்று மீட்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாக ஆலயக் குருக்கள், தர்மகர்த்தா சபைத் தலைவர், மூன்று பணியாளர்கள் ஆகியோர் கடற் படையினரால் கைது செய்யப்பட்டிருந் தனர்.

அவர்களில் பணியாளர்கள் தவிர்ந்த ஆலய குருக்கள், தர்மகர்த்தா சபைத் தலைவர் ஆகியோர் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் இருவரையும் மேலும் விசாரணை செய்ய வேண்டிய தேவை உள்ளதால், அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு பொலிஸார் பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசிடம் கோரினர்.

அக்கோரிக்கைக்கு அனுமதி வழங்கிய நீதிவான், இருவரையும் எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும் என்று உத்தரவிட்டார். (அ-1)

## வேலணையில் புதன் மாலை இருவர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், மே 4

வேலணை 4ஆம் வட்டாரத்தில் நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் இருவர் இனந்தெரியாத ஆயுத தாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அதே இடத்தைச் சேர்ந்த சிவபாலன் கஜேந்திரபாலன் (வயது 21), கந்தையா கண்ணதாசன் (வயது 28 - ஒரு பிள்ளையின் தந்தை) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

புதன்கிழமை மாலை இருவரும் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வேளை, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதவர்கள் அவர்கள் மீது வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் இருவரும் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பதில் நீதிவான் எம்.திருநாவுக்கரசு சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-1)

## தென்மராட்சியில் மினி சூறாவளி; இருவர் காயம்; உடைமைகள் சேதம்

யாழ்ப்பாணம்,மே 4

தென்மராட்சியில் நேற்று முற்பகல் 11.30 மணிக்கு வீசிய சூறாவளியால் இருவர் காயமடைந்தனர். பொதுமக்களின் உடைமைகள் பலவும் சேதமடைந்தன.

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி, கல்வயல், மட்டுவில், மீசாலை ஆகிய பகுதிகளில் நேற்றுமுற்பகல் திடீரெனக் கடுங்காற்று வீசியது. சுமார் ஐந்து நிமிடங்கள் வீசிய இந்த மினி சூறாவளியால் பலத்த சேதங்கள் உண்டாகின.

மீசாலை மேற்குப் பகுதியில் வீடு ஒன்றின் மீது பனைமரம் வீழ்ந்ததில் வீட்டில் இருந்த இருவர் காயமடைந்தனர். ரவி பிரசாத் (வயது 16), ரகு கீர்த்தனா (வயது 13) ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களே காயமடைந்தவர்கள் ஆவர். அவர்கள் இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டனர்.

சூறாவளி காரணமாக காரையோரப் பகுதியில் அமைந்திருந்த படையினரின் காவலரண்களில் இருந்த கூரைத் தகடுகள் தூக்கி வீசப்பட்டன. கரையோரப் பகுதி வீடுகளும் சேதமடைந்தன.

சாவகச்சேரி நகரசபை சைக்கிள் தரிப்பிடமும் தூக்கி வீசப்பட்டது.

பனை, தென்னை மற்றும் பாரிய மரங்கள் வீழ்ந்ததால் பெரும் சேதங்கள் ஏற்பட்டன.

(அ-1-31-207)

## ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவதில் ஆசிரியர்கள் சிரமம்

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் தமக்குக் கிடைக்க வேண்டிய பெற்றுக்கொள்ளாத லீவு நாள்களுக்குரிய சம்பள ஊக்குவிப்புக் கொடுப்பனவைப் பெறுவதில் பெரும் பாதிப்புகளை எதிர்நோக்குவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர், நவம்பர் டிசெம்பர் மாதங்களில் சனிக்கிழமை தோறும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் காலச் சூழலை கருத்தில் கொண்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்குடன் செயற்பட்டன. இந்த சனிக்கிழமை பாடசாலை நாள்கள் பாடசாலை வேலை நாள் கலண்டருக்கு மேலதிகமானவை .

பெற்றுக்கொள்ளாத லீவு நாள்களுக்கு சம்பள ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதற்கான லீவு விபரம் வலயக் கல்வி அலுவலகங்களினால் கோரப்பட்ட போது, பாடசாலை அதிபர்கள் சிலர் சனிக்கிழமையையும் உள்ளடக்கி 'பி-100' படிவத்தில் ஆசிரியர்களின் லீவு விபரத்தை சமர்ப்பித்தனர்.

சனிக்கிழமையையும் உள்ளடக்கி ஆசிரியர்களின் லீவு கணிப்பீடு செய்யப்பட்டிருப்பதால், ஆசிரியர்கள் பெற்றுக்கொண்ட லீவு நாள்களின் எண்ணிக்கை அதிகமாக காட்டப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளாத லீவு தொடர்பாக பெறக்கூடிய ஊக்குவிப்பு தொகை குறைவடைந்துள்ளது என்று ஆசிரியர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்படுகிறது.

நிர்வாக ரீதியில் சில அதிபர்கள் விளக்கக் குறைவாக நடந்துகொள்வது பற்றியும் ஆசிரியர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகள் இழக்கப்படுவது தொடர்பாகவும் ஆசிரியர் தொழிற்சங்கங்களும் அக்கறை கொள்ளாமல் இருப்பதாக ஆசிரியர்கள் பலரும் விசனம் தெரிவிக்கின்றனர். (அ-11)

## பஸ்சேவை நிறுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் பாதிப்பு

கைதடி,மே.4

இலங்கை போக்குவரத்துச் சபையினால் யாழ்.நகரில் இருந்து கைதடி வடக்கிற்கென சேவையில் ஈடுபட்டுவந்த பஸ்சேவை கடந்த சிலமாதங்களுக்கு முன் திடீரென முன்னறிவித்தல் இன்றி இடைநிறுத்தப்பட்டதால் மாணவர்களும், பொது மக்களும் பெரும் அவலங்களைச்சந்தித்து வருவதாக பயணிகள்தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

பலவருடங்களாக இடம்பெற்று வந்த இச்சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பாடசாலைமாணவர்கள், அரச ஊழியர்கள் உட்பட பலர் நான்கு கிலோ மீற்றர் தூரம் நடந்துசென்று கைதடிச்சந்தியில் இருந்தே யாழ்.நகர் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இச்சேவையை தொடர்ந்துநடத்த இலங்கை போக்குவரத்துசபை உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என கைதடியில் உள்ளபொதுஅமைப்புகள் பலவும் வேண்டுகோள் விடுத்துள்ளன.

(அ-1-75)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை - 22 | சனிக்கிழமை 05.05.2007 |
| திதி: திருதியை | முன்னிரவு : 07.45 |
| நட்சத்திரம்: | கேட்டை பின்னிரவு : 01.56 |
| [illegible] | : 02.56 - 04.26 |
| [illegible] | : 08.56 - 10.26 |

## காரைநகரில் நாளை மறுதினம் மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம்,மே 4

காரை. அபிவிருத்திச் சபையும் யாழ்ப்பாண லயன்ஸ் கழகமும், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையும் இணைந்து நடத்தும் பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை சுற்றயல் கூறு காரைநகர் வைத்தியசாலையில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளது.

இவ் மருத்துவ முகாமில் சத்திரசிகிச்சை, முருத்துவ, பெண் நோயியல், மகப்பேற்றியல், குழந்தை மருத்துவவியல், புற்றுநோயியல், கண் நோயியல், சயரோகம் மற்றும் சரும நோயியல் சார் மருத்துவர்கள் கலந்துகொண்டு சிகிச்சை மற்றும் ஆலோசனை வழங்குவர். அத்துடன் இரத்த அழுத்த சோதனைகள் மற்றும் சிறுநீர், இரத்த சோதனைகளும் உடல் உறுப்பு (Scanning) பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

காரைநகர், மூளாய், சுழிபுரம், வட்டுக்கோட்டை, சங்கானை மற்றும் தீவகங்களைச் சேர்ந்த நோயாளிகள் இலவச மருத்துவ முகாமில் கலந்து வைத்திய சேவையை பெற்றுக்கொள்ளலாம் என்று அனுசரணையாளர்கள் தெரிவித்தனர். (அ-1)

## திருத்த வேலைகளுக்காக குடிதண்ணீர் விநியோகம் தற்காலிக நிறுத்தம்

யாழ்ப்பாணம்,மே 4

பிரதான குடிதண்ணீர் தாங்கியில் இருந்து ஆஸ்பத்திரி வீதி, இராசாவின் தோட்ட வீதி, கோயில் வீதி, ஸ்ரான்லி வீதி ஆகிய பகுதிகளுக்கான குடி தண்ணீர் விநியோகம் திருத்த வேலைகளுக்காக நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர சபையின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மார்ட்டின் வீதிக்கும் மடம் வீதிக்கும் இடையில் குடி தண்ணீர் விநியோகக் குழாய் உடைந்துள்ளது.

அதன் காரணமாக குடி தண்ணீர் வீண் விரயமாகியதை அவதானித்து நீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருத்த வேலைகள் முடிவடையும் வரை குறிப்பிட்ட பகுதிகளுக்கான குடி தண்ணீர் விநியோகம் தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கும். (அ-1-203)

## திருமலையில் இருந்து கோதுமை மா வந்தது

யாழ்ப்பாணம், மே 4

திருகோணமலையில் இருந்து 2 ஆயிரத்து200மெற்றிக்தொன் கோதுமை மாவுடன் 'ஜால' கப்பல் காங்கேசன் துறை வந்துள்ளது.

கப்பலில் இருந்து இறக்கப்படும் கோதுமை மா உடனுக்குடன் ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்படும் என்றும் -

கோதுமைமாவுக்குத் தட்டுப்பாடு எதுவும் இல்லை என்றும் - அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## கிராமஅலுவலர் பிரிவுரீதியாக சிறிய வீதிகள் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம் மே.4

'மகாநெகும' அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் குடாநாட்டில் உள்ள சிறிய வீதிகள், விசாயவீதிகள், பாலங்கள் என்பன புனரமைக்கப்படவுள்ளன.

கிராம அலுவலர் பிரிவுரீதியாக விவரங்கள் திரட்டப்பட்டு கிராம அதிகாரிகளால் குறிக்கப்படும்வீதிகள் முன்னுரிமைப் படுத்தப்படும்.

ஒவ்வொரு கிராமஅலுவலர் பிரிவிற்கும் முதற்கட்டமாக ஒருமில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வீதிஅபிவிருத்திப் பணிகள்யாவும் பிரதேச செயலர் ஊடாக உள்ளூராட்சி சபைகளினால் செயற்படுத்தப்படும்.

(அ-1-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன நெரிசல்களில் சிக்கி நீண்ட நேரத்தை வீதிகளில் கழிக்க நேர்ந்தது. பிரதான வீதிகள் உட்பட நகரின் பல வீதிகளில் மூன்று அடி உயரத்துக்கு மேல் வெள்ளம் பாய்ந்தது. சிற்றூர்திகளும் ஏனைய வாகனங்களும் வெள்ளத்தில் சிக்குண்டன. பல வாகனங்கள் வெள்ள நீர் புகுந்ததில் செயலிழந்து ஆங்காங்கே வீதிகளில் தரித்து நின்றன. பயணிகள் பஸ்களும் வெள்ளம் காரணமாக மாற்று வீதிகளூடாகச் செல்ல நேர்ந்தது.

வெசாக் பந்தல்களும் அடைமழை மற்றும் புயல் காற்றினால் சாய்ந்தன. இதனாலும் வீதிகளில் போக்குவரத்துகள் தடைப்பட்டன.

மேல்மாகாணம் மற்றும் தென்மாகாணத்தில் நேற்று அதிகாலை முதல் கடும் மழை பெய்ததாக வானிலை அவதான நிலையம் தெரிவிக்கின்றது. வெள்ளம், மண்சரிவு காரணமாக ஐவர் உயிரிழந்துள்ளனர்.

காலி வீதியிலும் கிருலப்பனை வீதியிலும் ஒரு பெண் உட்பட இருவர் மின்னலால் தாக்கப்பட்டு உடல் கருகி உயிரிழந்தனர்.

37வயதுடைய மற்றொரு பெண் மொறட்டுவ பகுதியில் திறந்த நிலையில் காணப்பட்ட 60அடி ஆழ சாக்கடை வடிகாலுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார்.

இதேவேளை, காலி நாகொட பகுதியில் மழைகாரணமாக ஏற்பட்ட மண்சரிவில் இரண்டு சிறுவர்கள் கட்டட இடிபாடுகளில் சிக்குண்டு உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

### இரவிலும் மழை நீடித்தது

தொடர்ச்சியாகப் பெய்த கடும் மழையினால் நேற்று பிரதான கணனி வலையமைப்புகள் யாவும் துண்டிக்கப்பட்டிருந்தன. மின்சாரமும் நீண்ட நேரமும் துண்டிக்கப்பட்டது. நேற்று இரவும் கொழும்பு நகரில் தொடர்ந்து மழை பெய்துகொண்டிருந்தது.

வெசாக் அலங்காரத் தோரணைகள் மழையினால் சேதமடைந்தன. கொழும்பில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கி காணப்பட்டன. இதனால் நீண்ட நேர வாகனப்போக்குவரத்து நெருக்கடி காணப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஜயந்த விக்கிரமரட்ண தெரிவித்தார்.

### மண்சரிவு

காலியில் இடம்பெற்ற மண்சரிவினால் அப்பகுதிக்கான ரயில் சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன. கோட்டையில் இருந்து மருதானைக்குச் செல்லும் ரயில் தண்டவாளங்கள் நீரில் மூழ்கியிருப்பதனால் அப்பகுதிகளிலும் ரயில் போக்குவரத்து இடம்பெறவில்லை என்றும் ரயில்வே கட்டுபாட்டு நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

புறக்கோட்டைப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பல நீரில் மூழ்கின. இதனால் அங்கு வர்த்தக நடவடிக்கைகள் பாதிப்படைந்தன.

# சந்திரிகாவுக்கான சிறப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊதியத்தில் மூன்றில் ஒரு பகுதியை அதற்காக அரசு பிடித்துக் கொள்ளவேண்டும்.

★ அளவுக்கு அதிகமான பாதுகாப்பு அதிகாரிகள், வாகனங்கள், உதவியாளர்கள் என்று ஆளணி வழங்கக்கூடாது. அப்படி வழங்கப்பட்டமை மீளப்பெறப்பட வேண்டும். 1986ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க 'ஜனாதிபதி விசேட சிறப்புரிமைகள் சட்டத்தில்' கூறப்பட்டபடி உரிய சலுகைகள் மட்டுமே ஓய்வுபெற்ற ஜனாதிபதி என்ற முறையில் சந்திரிகாவுக்கு வழங்கப்பட வேண்டும்.

★ மேற்படி வழக்குத் தொடர்பாக மனுதாரர்களுக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஒரு லட்சம் ரூபாவும், அரசு ஒரு லட்சம் ரூபாவும் வழக்கு செலவுத் தொகையாக வழங்கவேண்டும்.

- இவ்வாறு நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஓய்வு பெறுவதை ஒட்டி அவருக்கு அளவுக்கு அதிகமான சிறப்புரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்து அதனை ஆட்சேபித்து சட்டத்தரணி நிரோஷன் ஹேரத் என்பவர் உட்பட மூன்று சட்டத்தரணிகள் தனித்தனியாக உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அந்த மனுக்கள் மீதான தீர்ப்பிலேயே நீதிமன்றம் இவ்வாறு தெரிவித்திருக்கின்றது. (சி)

# பாதுகாப்பு செலவினத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''எங்கள் கவலை குறித்து இலங்கை அரசுக்கு தெளிவான சமிக்ஞை - செய்தி - ஒன்றை அனுப்ப முடிவு செய்தோம். இலங்கை அரசுடன் பேச்சுகள் நடந்து, திருப்தி நிலை ஏற்பட்ட பின்னரே முடக்கப்பட்ட எஞ்சிய உதவிகள் விடுவிக்கப்படும்.

''அந்தப் பேச்சுகள் நிச்சயமாக இலங்கையின் மனித உரிமைகள் பேணப்படுதல் சம்பந்தமான விடயங்களை முக்கியமாக உள்ளடக்கி இருக்கும்'' - என்றார் அவர்.

### இலங்கை அரசு போட்ட முட்டுக்கட்டை

இதற்கிடையில் -

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரின் இலங்கைக்கான விசேட தூதுவர் போல் மேர்பி அடங்கலான இராஜதந்திரிகள் குழு ஒன்று புலிகளை பேச்சு மேசைக்கு மீண்டும் இழுத்து வரும் முயற்சியாக கிளிநொச்சி செல்ல எத்தனித்தது என்றும்-

இலங்கை அரசு அதற்கு நேற்று முட்டுக் கட்டை போட்டுவிட்டது என்றும் -

செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டன.

யுத்தம் இடம்பெறும் இச்சமயத்தில் அங்கு செல்வது பாதுகாப்பானதல்ல என்று இராஜதந்திரிகளிடம் கொழும்பு கூறிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரின் வழமையான கிளிநொச்சி விஜயத்தையும் கொழும்பு அரசு கடந்த வாரம் தடுத்துவிட்டது என்பதும் கவனிக்கத்தக்கது. (அ-சி)


**போட்டிப்பரீட்சை வகுப்புகள்**

★ பட்டதாரி ஆசிரியர் தெரிவு
சனி, ஞாயிறு 11.00 - 2.00
★ உப - அஞ்சல் அலுவலர் தெரிவு
சனி, ஞாயிறு 12.30 - 3.00
ஆசிரியர் த. தவசேகர்
D.M.I. ஆரியகுளம் சந்தி.

**PERSONAL CLASSES**
364, Stanly Rd.
GAQ, BA - I, B.A Final
தமிழ் - திரு K. தர்மராஜா
Hin. Cul. - சைவப்புலவர் சத்தியசீலன்
Pol. - பொன். சந்துரு
மீட்டல் வினா விடை வகுப்புகள்
GAQ - Jaffna / B.A.I
ENGLISH - Paper Class
Tamil BA Final பேராதனை
Sat, Sun - 8 - 9 a.m. ஆரம்பம் - நாளை

## இரவு மேற்பார்வையாளர்

கொழும்பில் இயங்கும் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் இரவு நேரப்பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இரவு நேர மேற்பார்வையாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கொழும்பில் தங்குமிட வசதி தரப்படும்.
★ உணவுக்கான கொடுப்பனவுகளும் அனுமதிக்கப்படும்.
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

**தகைமைகள்**

★ முப்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்
★ இரவு கடமை புரிவதற்கு ஏற்ற உடல் ஆரோக்கியம்
★ இரவு நேரப் பணிகளை முகாமை செய்து நிலைமைக்கு ஏற்ப முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தும் திறமை
★ பத்திரிகைத்துறைப் பணிகள் தொடர்பான முன் அனுபவம் இருப்பின் முன்னுரிமை
★ விண்ணப்பதாரர் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்துடன் உறவினர் அல்லாத இருவரது நற்சான்றிதழ்களையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

விண்ணப்பங்களை
விளம்பர இலக்கம் 2515,
மே/ பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 11.05.2007 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.

**நாளை ஆரம்பம் (Sat. & Sun)**
A/L 2009 ( 8.30 - 9.30 am) ஆரம்பத்தில் இருந்து
A/L 2008 (9.30 - 10.30 am) (பங்குடமை)
A/L 2007 (10.30 - 11.30 am) (பாதீடு)
By: J.T. அழகன்
COLLEGE OF ACCOUNTING
பலாலி வீதி, திருநெல்வேலி,
(இலங்கை வங்கி முன்)

**விசேட வகுப்புகள்**
தரம் 6 முதல் O/Lவரை
கணிதம் - மகேந்திரன், ஆங்கிலம் - ஜெயந்தன்
தரம் - 04, 05 புலமைப்பரிசில்
அன்பழகன் ஆசிரியரின்
பரீட்சைகள் ஆரம்பம் - 05.05.2007 2 p.m.
ஐடியல், ஆஸ்பத்திரி வீதி, மானிப்பாய்.

**2007 மாணவர்களுக்கான தொடர்கருத்தரங்கு**
**நாடகமும் அரங்கியலும்**
by: K.மங்களேஸ் B.A. Hons Dra. spl
பகுதி - I வினா - விடை எழுதும்முறை
குறு வினா - விடை
பகுதி - II நாடக பாடங்கள் / எழுத்துக்கள்
பகுதி - III கலந்துரையாடலுடன் கூடிய பயிற்சி அரங்க வழிகாட்டல்கள்
நடிப்பு / காண்பியம் / விமர்சனம்
★ 03 பயிற்சி பரீட்சைகள்
★ ஏனைய நேர அட்டவணை முதல் வகுப்பில்
★ 2008, 2009 மாணவர்களும் இணைந்து கொள்ளலாம்.


| | |
|---|---|
| திசுர் கல்வி நிறுவனம் இணுவில் | 07.05.2007 திங்கள் காலை 9 மணி |
| ஐடியல் மானிப்பாய் ஆஸ்பத்திரி வீதி. | 05.05.2007 சனி மாலை 3.30 மணி |

**நியு பிறைற் கல்வி நிலையம்**
37, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்
நாளை ஆரம்பம் (Sat. & Sun)
A/L 2009 (1 - 2 p.m)
ஆரம்பத்தில் இருந்து
A/L 2008 (2 - 3 p.m)
(பங்குடமை)
A/L 2007 (3 - 4 p.m)
(பாதீடு)
By: J.T. அழகன்

**அறிவொளி**
NALLUR
A/L 2008
BIO., MATHS
பிரிவுகள் ஆரம்பம்
CHE. -அன்பழகன்
PHY. -K.செல்வன்
BIO.-அல்போன்ஸ்
C. MATHS சிவகரன்
ஸ்ரீதரன்
05.05.2007
Sat. - 4 p.m.
Inorganic


## நீங்கா நினைவில் ஆண்டுகள் இரண்டு

மலர்வு 22 ★ 11 ★ 1938



உதிர்வு 26 ★ 04 ★ 2005

**அமரர் கார்த்தி கிருஷ்ணபிள்ளை**
(இளைப்பாறிய இ.போ.ச. சாரதி)
திதி: துதியை (04.05.2007)

உதிரத்தை உரமாக்கி ஊன் உறக்கம் ஏதுமின்றி
எமக்கு வழிகாட்டி உயர்வுக்கு வித்திட்டீர்கள்
அன்பு என்ற வார்த்தைக்கு வடிவத்தைக் காட்டி
பண்பு என்ற சொல்லுக்கு அர்த்தத்தைக் கூட்டி
எம்மை புன்னகையுடன் வாழவைத்தீர்கள் ஐயா!

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மாணிக்க மஹால்,
கரணவாய், கரவெட்டி.

## மரண அறிவித்தல்

**திருமதி செல்லையா அன்னம்மா**

காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா அன்னம்மா 02.05.2007 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பேரம்பலம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வீரவாகு - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அரசரத்தினம் (வவுனியா), பாலாமணி, கணேசலிங்கம் (லண்டன்), சாவித்திரிதேவி, சாரதாதேவி, லோகேஸ்வரன் (லண்டன்), லோகேஸ்வரி (லண்டன்), காலஞ்சென்ற தனபாக்கியம் ஆகியோரின் அன்புத் தாயும் இராஜகாந்தி (வவுனியா), வரதராசா, தங்கபுஸ்பம் (லண்டன்), தர்மலிங்கம், சிவகுமார், அனுசுயா (லண்டன்), மகிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும் பாக்கியம் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் (மலேசியா), செல்லத்துரை ஆகியோரின் சகோதரியும் பிரணவன், பிரசாந்தன், பிரகலாதன், பிரநீதன், திருவரங்கன், சிறிரங்கன், வாரீசன், வினித், ரம்யா, வித்தியாதரன், கௌரீதரன், ஆரணி, குணதரன், சிவகஜன், சிவசொரூபன், அர்ச்சயா, அபிஷன், ஆருரன், அபிதா ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.05.2007) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. அரசரத்தினம் (மகன்),
குடும்பத்தினர்.

வாரிவளவு,
காரைநகர். (60309)

## அரியாத நினைவுகளுடன்

6o திங்கள்

அன்னை மடியில்: 02 . 06 . 1927



ஆண்டவன் மடியில் 07 . 11 . 2001

**பொன்னையா பூவிலிங்கம்**
(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ பரியோவான் கல்லூரி - களுத்துறை)

ஆனதே திங்கள் அறுபத்தாறு
அழிந்திடுமோ உங்கள் அன்பு
காலம் தான் கரைந்திடினும்
காத்திட வருவாயோ அப்பா.

திங்கள் 60 இல்

அன்னை மடியில்: 10 . 07 . 1935



ஆண்டவன் மடியில் 04 . 05 . 2002

**பூவிலிங்கம் மரியமுத்து**
(இளைப்பாறிய உப அதிபர், யா/ ஆனைப்பந்தி மெ.மி., யாழ். வேம்படி மகளிர் கல்லூரி)

ஐயிரண்டு திங்கள் சுமந்தீர்
அறுபது திங்களாய் மறந்தீரோ
கண்ணீரில் கரையுதெம் நெஞ்சு
காத்திட வருவாயோ அம்மா.

இல. 85, தேவாலய வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவில்:
மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org